**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.33/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு நவம்பர் மாதம் **18** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 18.12.2023**

**பெயர் - விநாயகமூர்த்தி**

**த/பெ - கோவிந்தசாமி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 3.01.p.m.**

**குறுக்கு விசாரணை -**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் எஸ்.எல்.சி வரை படித்துள்ளேன். நான் எங்கு வேலை செய்கிறனே் என்றால் அசோக் லே லேண்ட் நிறுவனத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்று விட்டேன். இந்த வழக்கு யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாலாமணி மற்றும் சுரேஷ் மற்றம் 2 சாட்சிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்ககல் செய்துள்ளேன் என்றால், என் இடம் குறித்து பிரதிவாதிகள் செய்துள்ள பத்திரத்ததை ரத்து செய்ய கோரியும் என் இடத்தில் என் அனுபவத்தை அவர்கள் தடை செய்ய கூடாது எனக் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளை எனக்கு எப்படி தெரியும் என்றால், சுரேஷ் எனது நிலத்தை விற்க முயற்சி செய்யும் போது நான் அவர்கள் குறித்து தெரிந்து கொண்டேன். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் மீஞ்சூர் பி.டிஓ அலுவலக்திற்கு அருகில் உள்ளது.

2. அந்த சொத்தின் நீள அகலம் தெரியுமா என்றால் நீள அகலம் தெரியாது அதன் மொத்த விஸ்தீரனம் 1 கிரவுன்டு அளவிற்கு 50 சதுரஅடி குறைவு, வா.சா.ஆ1 ன் படி தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்றால் மணி ஆகும். மணியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அவர் எனது குடும்ப நண்பர். மேற்படி மணியிடமிருந்து தான் தாவா சொத்தை நான்

வாங்கினேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ1 ன்படி மேற்படி அதில் அடங்கிய சொத்தின் புல எண் என்றால் 434/1 ஆகும். இவ்வழககில் சுரேஷ் மற்றும் பாலாமணி தாக்கல் செய்த பதிலுரை விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் பிராதில் தாவா சொத்து சம்ந்தமாக என் பெயரில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், என் பெயரில் ஒப்பந்தம் உள்ளது. எந்த தேதியில் மேற்படி ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் 1997 ல் போடப்பட்டது. தேதி நினைவில் இல்லை. அதன் பிறகு என்பெயரில் தாவா சொத்து சம்பந்தமாக பத்திரம் போடப்பட்டதா என்றால் இல்லை. எஸ், எஸ் மணி 20.04.2002 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவருக்கு வாரிசுகள் யார் யார் என்றால் அவரது மணைவி மட்டும் தான்.

3. நான் தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பது குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றிதழ் தாக்கல் செய்துள்ளனே் வேறு வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா செதாத்தில் எனகது உரிமை இல்லை என்றும் அவ்வாறு இருக்க நான் கோரியவாறு விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஸ்வாதீனத்தின நான் இல்லை என்றும் அதனால் நிறந்தர உறுத்து கட்டளை பரிகாரம் நான் கோர இயலாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்குரையின் சொத்து விவரத்தில் கூறப்பட்டுள்ள புல எண் 435/1 என்ற சொத்துக்கு மணிக்கே உரிமை இல்லை என்றால் சரிதான். மணிஇறந்த பிறகு அவருடைய வாரிசான பாலாமணி 2ம் பிரதிவாதி சுரேஷ் க்கு வா.சா.ஆ1 ன்படி ஆன சொத்தினை எழுதி வைத்தார் என்றால் சரிதான். எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த தாவா நிலைக்கதக்கதல்ல என்றும் செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்யபட வேண்டும் என கூறினால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 3.24. p.m.**